# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in
Website: www.tnteu.ac.in


No.TNTEU/R/DR-I/Circular/2022/03826 நாள்: 12.09.2022

**முனைவர். மூ.சௌந்திரராஜன், பி.எச்.டி,**
**பதிவாளர் (பொ)**

முதல்வர்கள்/நிர்வாகிகள்
அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

**பொருள்:** TNTEU - இணைவுபெற்ற கல்வியியல் கல்லூரிகள் - 2022 – 2023-ஆம் கல்வியாண்டு - B.Sc., B.Ed / B.A., B.Ed– பட்டவகுப்பு – மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் நீட்டித்தல் மற்றும் முதல் பருவத்திற்கான வகுப்புக்கள் - தொடங்குதல் - தகவல் தெரிவித்தல் சார்பு.

**பார்வை:** 1. கல்லூரி நிர்வாகிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைக் கடிதங்கள்.
2. பல்கலைக்கழக மாணவர் சேர்க்கைக்குழு ஒப்புதல், நாள்: 12.09.2022.

*****

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப்பெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகளில் 2022-23-ஆம் கல்வியாண்டில் B.Sc., B.Ed/B.A., B.Ed– பட்டவகுப்பிற்கு மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் 08.09.2022 என அறிவிக்கப்பட்டது. மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாளாக வருகின்ற 24.09.2022 என அறிவிக்கப்படுகிறது. எனவே, கல்லூரி முதல்வர்கள், நிர்வாகிகள் கடைசி நாளுக்குள் மாணவர் சேர்க்கையினை முடித்து சேர்க்கை விவரங்களைப் பல்கலைக்கழக இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள B.Sc., B.Ed/B.A., B.Ed Admission link–ல் வருகின்ற 24.09.2022 நாளுக்குள் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்து கடைசி நேர தடங்கல்களை தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் மேலும் நீட்டிக்கப்படாது என்பதை கண்டிப்பாக தெரிவிக்கலாகிறது.

மேலும், கல்லூரியில் இதுநாள் வரை சேர்ந்த மாணாக்கர்களுக்கு, முதல் பருவத்திற்கான வகுப்புகளை வருகின்ற 15.09.2022 அன்று முதல் தொடங்கி நடத்திட வேண்டுமாய் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், மாணவர் சேர்க்கைக்கு அரசு தேர்வுத் துறையிலிருந்து இருந்து வெளியிடப்பட்ட +2 படிப்பிற்கான இணையதள தேர்வு முடிவு நகல்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியரின் சான்றொப்பம் (Attested Copy of Government School Education Online Result) பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும், அதனையே, மாணவர் சேர்க்கை சான்றிதழ் சரிபார்ப்புக்கு ஏற்றுக்கொள்ளப்படும் ஆவணமாக கல்லூரி முதல்வர்கள் சான்றொப்பம் (Attested) செய்து சமர்ப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கலாகிறது.

12/9/22
பதிவாளர் (பொ)

Copy to:

1. Deputy Registrars
2. P.A to VC
3. Assistant Registrars
4. Registrar's Office (File)
5. Notice Board